## 5. PROTOCOL

### 5.1 உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் விழாக்களில் கடைபிடிக்க வேண்டிய மரபுசீர் முறை வரிசை

ஊரக வளர்ச்சி (சி1) துறை

அரசாணை (நிலை) எண். 355 — நாள் : 16.12.1997

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.1277, பொதுத் துறை, நாள் 1.8.1989
2. கடித எண். 18721/அ/விழா/96 செய்தி (ம) சுற்றுலாத் துறை, நாள் 9.7.1996.
3. அரசாணை (நிலை) எண். 1316, பொது (மரபுச் சீர்முறை 1) நாள் 12.11.1996.

**ஆணை**

சில கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நடத்திய உள்ளாட்சி அமைப்புகளின் விழாக்களில் அரசு விழா குறித்த மரபுச் சீர்முறை கடைப்பிடிக்கப்படவில்லை என்று அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டிய குழப்பங்கள் மற்றும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்காமல் விழா நடத்தியது, மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல் விழா நடத்தியது, கட்சி பிரமுகர்களை சிறப்பு அழைப்பாளராக வைத்து விழா நடத்தியது, சிறிய திட்டங்களுக்கு தொடக்க விழா நடத்துவது, மிகச் சிறிய வேலைகளுக்கு சிறப்பு விருந்தினரை வைத்து கால்கோள் விழா நடத்துதல், சில ஆண்டுகளுக்கு முன் முடிக்கப்பட்ட வேலைகளுக்கு தொடக்கவிழா நடத்துதல், சிறப்பு விருந்தினரை எதிர்பார்த்து திட்டங்களை தொடங்காமல் வைத்திருத்தல் போன்ற காரணங்களால் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. உள்ளாட்சி தேர்தலுக்கு முன்னால் இருந்த இரண்டடுக்கு உள்ளாட்சி முறையில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் விழா நடத்துவது தொடர்பான பணிகளை கவனித்து வந்தனர். நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் நகரமன்றத் தலைவர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர் விழா நடத்துவது தொடர்பான பணிகளை மேற்கொண்டனர். உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் முடிந்த பின்னர் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் விழாக்களை தங்களுக்கேற்றவாறு நடத்திக் கொள்கிறார்கள். அவைகளில் அரசு விழா குறித்த மரபு சீர்முறையை பின்பற்றுவதில்லை. நிறைய இடங்களில் விழாக்களுக்கு முக்கியப் பிரமுகர்களை அழைப்பதில் தங்களுக்குள் போட்டி போடுகிறார்கள். இந்த நடவடிக்கைகள் கள அளவில் உள்ளாட்சி அமைப்புகளில் குழப்பங்களும் சங்கடங்களும் ஏற்படுத்தியுள்ளன. இந்த பிரச்சினைகளை சரிசெய்வதற்கு களப்பணியாளர்களின் பணி நேரங்கள் வீணடிக்கப்படுகின்றன.

2. இவைகளின் பிண்ணனியில் உள்ளாட்சி அமைப்புகளின் விழாக்கள் நடத்துவதற்கு அரசு விழா குறித்த மரபுச் சீர்முறையில் முக்கியப் பிரமுகர்களை அழைக்கவும் சரியான அறிவுரைகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் தெரிவிக்கவேண்டும் என கருதப்படுகிறது.

**2.(அ) தொடக்க விழா மற்றும் கால்கோள் விழா நடத்துவதற்கான திட்டப்பணிகளை தேர்வு செய்தல்**

1. உள்ளாட்சி அமைப்புகளில் அந்த நிதி ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகள் அல்லது கடந்த ஆண்டு முடிக்கப்பட்ட திட்டப்பணிகளில் இதுவரை பயன்படுத்தப்படாதவை போன்ற திட்டங்களுக்கு விழா நடத்தலாம். 1996–97 நிதி ஆண்டிற்கு முன்னால் முடிக்கப்பட்ட திட்டப் பணிகளுக்கு தொடக்க விழா நடத்தக் கூடாது. இதுபோன்று முடிக்கப்பட்ட திட்டப்பணிகள் உடனடியாக பயன்படுத்தப்பட வேண்டும்.

2. அரசால் தொடங்கப்படும் புதிய திட்டங்கள் தொடர்பான விழாக்கள் அரசால் மட்டுமே நடத்தப்படும். உள்ளாட்சி அமைப்புகள் இந்த திட்டங்களை திரும்ப தொடங்குவதற்கு பதிலாக இந்த புதிய திட்டங்களின் பயன்களை உள்ளாட்சி அமைப்புகள் அந்தப் பகுதி மக்களுக்கு அளித்து முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

3. திட்டப்பணிகளுக்கு கால்கோள் விழா நடத்துவதை ஊக்கப்படுத்தக்கூடாது. புதிய திட்டங்கள் / பணிகளை தொடங்க கால்கோள் விழா அவசியம் எனக் கருதப்பட்டால் அந்த விழாவிற்கு முக்கிய விருந்தினரை அழைப்பதற்கு முன்னால் மாவட்ட ஆட்சித்தலைவரின் முன் அனுமதி பெற வேண்டும்.

4. திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு அதனைத் தொடங்கவில்லை என்ற காரணம் காட்டி 30 நாட்களுக்கு மேல் அத்திட்டப்பணிகளை பயன்படுத்தாமல் இருக்கக்கூடாது.

**2(ஆ) விழாக்கள் நடத்துதல்**

1. உள்ளாட்சி அமைப்புத் தலைவர்கள் எந்த ஒரு விழா நடத்த வேண்டுமென்றாலும் அவர்கள் அந்த விழா நடத்தப்படவுள்ள தேதி, நேரம் மற்றும் அதில் கலந்துகொள்ளும் முக்கிய விருந்தினர் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவிக்க வேண்டும். அரசு விழா குறித்த மரபுச் சீர்முறை, சட்டம் ஒழுங்கு சரிசெய்ய பந்தோபஸ்து ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு மேற்சொன்ன முறைகளை திட்டப்பணிகள் தொடக்க விழாவில் தவறாமல் கடைபிடிக்க வேண்டும். இந்த நடைமுறைகள் கிராம ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் நடத்தும் அனைத்து விழாக்களிலும் கடைபிடிக்க வேண்டும்.

2. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டங்களைப் பொறுத்தவரை இவற்றுக்கான தொடக்க விழா நடத்த வேண்டியிருந்தால், அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் (சென்னை நீங்கலாக) சம்பந்தப்பட்ட சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினரை கலந்து ஆலோசித்து நடத்துவார்கள். மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டங்களின் விழாக்கள், தொடர்பாக மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

3. எந்த தொகுதியில் உள்ளாட்சி அமைப்புகள் விழா நடத்தப்படுகிறதோ அந்த தொகுதியின் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை விழாவில் கலந்து கொள்ள அழைக்க வேண்டும். விழாவில் கலந்து கொள்ள அவர்களின் சம்மதம் பெற்ற பின் அவர்களின் பெயர்களை அழைப்பிதழ்களில் அச்சிட வேண்டும். விழா கல்வெட்டு அல்லது பெயர் பலகையில் அவர்களுடைய பெயர்கள் பதவி வரிசை முறைப்படி இடம்பெற வேண்டும்.

4. விழாவில் கலந்துகொள்ளும் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி தலைவர்கள் / மேயர் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள பதவி வரிசை முறைப்படி கல்வெட்டு / பெயர் பலகையில் இடம் பெற வேண்டும்.

5. சாதாரணமாகவும், மிக எளிமையாகவும் விழா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மிகப் பெரிய கட் அவுட்கள், பேனர், வளைவுகள் மற்றும் மின்அலங்காரங்கள் செய்வதால் ஏற்படும் அதிகப்படியான செலவுகளை தவிர்க்க வேண்டும்.

6. விழாவில் மலர் செண்டுகள் கொடுப்பது, மாலையிடுவது சால்வை அணிவிப்பது போன்றவை ஏற்பாடு செய்யலாம். மிக அதிக அளவில் சால்வை வழங்குவது, மலர் செண்டுகள் அளிப்பது மற்றும் விலை உயர்ந்து பரிசுப்பொருள் அளிப்பது போன்றவை தவிர்க்க வேண்டும்.

7. விழா நடத்தும் இடங்களில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக சாலைகள் மற்றும் தெருக்களிலே தடை ஏற்படுத்தக் கூடாது. விழாக்கள் பொதுவான இடத்தில் நடத்தப்பட வேண்டும். தனியார் இடங்களில் நடத்தக்கூடாது,

8. செய்தித்தாள்கள் மற்றும் மின்னணு சாதனங்களில் அதிகமாக விளம்பரப்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

9. அனுமதிக்கக் கூடியதாயின் விழாவுக்கான செலவுகளை உள்ளாட்சி அமைப்புகளின் நிதியிலிருந்து அல்லது அந்த திட்டத்தின் நிதியிலிருந்து செலவிடலாம்.

10. உள்ளாட்சி அமைப்புகளின் விழா நடத்திட நிதி வசூல் செய்வது கண்டிப்பாக கூடாது.

**2(இ) உள்ளாட்சி அமைப்புகள் கடைபிடிக்க வேண்டிய மரபுசீர்முறை வரிசை**

தமிழ்நாட்டில் நடத்தப்படும் அனைத்து மாநில அளவு விழாக்களில் கடைப்பிடிக்க வேண்டிய மரபுசீர்முறை வரிசை தொடர்பாக அரசாணை நிலை எண் 1316 பொது (மரபுச் சீர்முறை) துறை நாள் 12.11.96ல் தெரிவிக்கப்பட்டது. தற்போது உள்ள ஆணை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மரபுச்சீர்முறை வரிசை தெளிவுபடுத்ததுவதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள மரபுச் சீர்முறை வரிசையை உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் அனைத்து விழாக்களிலும் கடைபிடிக்க வேண்டும். இவை அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் அன்றாட நிர்வாகத்திற்கு தொடர்புடையது அல்ல. பிரிவு 7ன்படி மாநிலத்தில் நடைபெறும் விழாக்களில் மரபுச்சீர்முறை வரிசைப்படி முதல்வரின் பெயர் மத்திய அமைச்சர்களின் பெயருக்கு முன்னால் இடம் பெற வேண்டும். கீழே, உள்ள அட்டவணையில்

குறிப்பிட்டு உள்ளவர்களின் தகுதி வரிசை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த பிரிவில் புதியதாக சேர்க்கப்படுபவர்கள் சேர்க்கப்படும் தேதியிலிருந்து அவர்களின் முதுநிலையை அறிந்து கொள்ளலாம். உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டம் அல்லது வார்டு எண் அடிப்படையில் இடம் பெறுவர். ஒரு விழாவில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டால், அந்த விழா நடைபெறும் இடத்தை சேர்ந்தவர்களுக்கு முதல் இடம் அளிக்கப்படும். அனைத்து உள்ளாட்சி அமைப்புகளை சேர்ந்தவர்களுக்கு முன் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இடம் பெறுவர். ஆளுநர், முதலமைச்சர், மாநில அமைச்சர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் மேயர்கள் ஆகியோரிடையே உள்ள மரபுச்சீர்முறை வரிசை கீழ்க்கண்டவாறு அமையும்.

| **மரபுச்சீர் முறை வரிசை எண்** | **பதவி** |
|---|---|
| 4 | தமிழ்நாடு ஆளுநர் |
| 7 | மத்திய அரசின் அமைச்சர்<br>தமிழ்நாடு முதலமைச்சர் |
| 10 | மத்திய அரசின் இணை அமைச்சர்கள் |
| 14 | தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர்கள் |
| 15 | தமிழ்நாடு அரசின் அமைச்சர்கள்<br>மத்திய அரசின் துணை அமைச்சர்கள் |
| 16 | சென்னை மாநகராட்சியின் மேயர் |
| 18 | தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர்<br>தமிழ்நாடு சட்டப்பேரவை அரசு கொரடா<br>தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்கட்சித்தலைவர் |
| 21 | மாநகராட்சிகளின் மற்ற மேயர்கள்<br>நாடாளுமன்ற உறுப்பினர் – ராஜ்ய சபா<br>நாடாளுமன்ற உறுப்பினர் – லோக்சபா<br>சட்டமன்ற உறுப்பினர் |
| 28 | மாவட்ட ஆட்சித்தலைவர்<br>மாநகராட்சி துணை மேயர்<br>மாநகராட்சி மன்ற எதிர்கட்சி தலைவர்<br>மாநகராட்சி உறுப்பினர்கள் |
| 28அ | மாவட்ட ஊராட்சித்தலைவர்<br>ஊராட்சி ஒன்றியத் தலைவர்<br>நகராட்சி மன்றத் தலைவர் |
| 29 | துணைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்<br>பேரூராட்சி தலைவர் |
| 29அ | கிராம ஊராட்சித்தலைவர்<br>துணைத்தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்<br>துணைத்தலைவர் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர் |

**3.** இந்த ஆணை உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த ஆணை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவல் சார்பற்ற குறிப்பு நாள் **13.11.1997**; செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண் **6**, நாள் **20.11.97** மற்றும் பொது (மரபுசீர்முறை) துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண் **2260/97** நாள் **19.11.97** ஆகிய துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்